செ.வெ.எண்: 310 நாள்: 13.06.2021

**மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.**

---

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் ஆகியோர் இன்று (13.06.2021) புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் கோவிட் நோய் தொற்றை கட்டுப்படுத்தும் வகையில் பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறார்கள் அதேவேளையில் பொதுமக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளை அறிந்து உடனுக்குடன் நிறைவேற்றிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். அந்த வகையில் மாவட்டங்களில் உள்ள அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் பொதுமக்களின் சிரமத்தை போக்கும் வகையில் சம்மந்தப்பட்ட சட்டமன்ற தொகுதி உறுப்பினரை சந்தித்து பொதுமக்கள் தங்கள் கோரிக்கைகளை எடுத்துரைக்கும் வகையில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் திறக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றையதினம் புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் திறந்து வைக்கப்பட்டது.

முன்னதாக மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், மற்றும் மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் புதுக்கோட்டை

புதுக்குளம் பூங்காவில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில் மரக்கன்றுகளை நட்டு, நகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு கோவிட் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் மருத்துவப் பொருட்களை வழங்கினார்கள். பின்னர் திருவள்ளுவர் நகர் 38 வது வார்டு மற்றும் திருவப்பூரில் 24 வது வார்டுகளில் பொதுமக்களுக்கு கோவிட் நிவாரண உதவிகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா அவர்கள், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.சின்னத்துரை அவர்கள், முன்னாள் அரசு வழக்கறிஞர் திரு.கே.கே.செல்லப்பாண்டியன், வருவாய் கோட்டாட்சியர் டெய்சிக்குமார், நகராட்சி பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன் மற்றும் நைனா முகமது, வீரமணி, பாலு, செந்தில், சரவணன், அசோக்பாண்டியன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**